IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.257/2010
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி இராஜம்மாள் க.பெ.பொன்னுச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 08.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. நான் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் விசாரணையில் 1ம் வாதி ஆஜராகி எதிர்வாதம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை பி.வா.சா.ஆ.12 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் சர்வே எண்.212/6 ல் நிலவுடமை திட்டத்திற்கு முன்பு சூரப்புக்கவுண்டர் மற்றும் கூடாண்டிகவுண்டர் பெயரில் இருந்ததாகவும் நிலவுடமை திட்டத்திற்கு பின்பு முத்துக்கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் பெயரிலும் பெத்தணன் செட்டியார் மகன் தவமணி பெயரிலும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் முத்துக்கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் என்பது தவறு உண்மையில் பெருமாள் கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர்.

2. புல எண். 212/6B க்கு முத்துக்கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் பெயரில் பட்டா இருந்தால் அது தவறா என்றால் ஆமாம். என்னுடைய சாட்சியத்தின் படி பி.வா.சா.ஆ. 12 ல் UDRக்கு பின்பு புல எண். 212/6B என்பது முத்துக்கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் என்று குறிப்பிட்டுள்ளது

தவறானது என்றால் தவறானதுதான். மேற்படி தவறான பதிவின் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 12 உத்தரவின் அடிப்படையில் ஏற்பட்ட பி.வா.சா.ஆ. 13, 14 தவறானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தானது எந்த பட்டா எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 4260 ஆகும். ஆனால் சரியாக தெரியவில்லை. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ15 வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ16 கிரைய பத்திரத்தில் கண்டபடி கிரையம் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ16 கிரைய ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ17 ஒரு ஒத்தி ஆவணத்தை பற்றி எனக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஒத்தி ஆவணத்தில் பெருமாள் கவுண்டருக்கு தாவா சொத்து எப்படி உரிமைப்பட்டது என்பது தெரிவிக்கப்படவில்லை என்றால் மேற்படி ஆவணம் பெருமாள் கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் எழுதிகொடுக்கவில்லை.

3. பி.வா.சா.ஆ17 ஆவணமானது வெள்ளச்சி என்ற அழகம்மாளுக்கு பெருமாள் கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் சர்வே எண். 212/6Aக்கு எழுதிகொடுத்த நிலமாகும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ17 ல் சர்வே எண். 212/6A என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ17 ல் நான்குமாலில் குறிப்பிடப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ17 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 212/6B எனக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ17 ல் சர்வே எண். 212/6B என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ17 ல்

அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ17 ல் தெற்கு மாலாக கூடாண்டிக்கவுண்டர் நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி தெற்குமாலாக சொல்லப்பட்டுள்ள சொத்துதான் எங்களுக்கு பாத்தியம் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ17 ல் தெற்குமால் குறித்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ18 தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காகத்தான் தாக்கல் செய்துள்ளேன்.

4. பி.வா.சா.ஆ18 ஆவணத்தின் தெற்குமாலாக கூடாண்டிகவுண்டர் நிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ19 தாவா சொத்துக்கு கட்டுப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 19 ஆவணத்திற்கு கட்டுப்பட்ட சொத்தை நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ21 கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 21 ல் சர்வே எண். 212/6Aக்கு நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 21 முதல் 24 வரையுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள நான்குமால் மூலமாக தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 6 ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ12

மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாகவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.07 10:01:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.